அறிவிக்கை எண்.2 / 2017

# தமிழ்நாடு அரசு
# பட்டு வளர்ச்சித்துறை

**நேரடி நியமனம் மூலம் ஓட்டுநர், அலுவலக உதவியாளர் மற்றும் காவலர் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிக்கை**

தமிழ்நாடு பட்டு வளர்ச்சித்துறையில் பொதுப்பணிகள் மற்றும் அடிப்படை பணியின் கீழ் காலியாக உள்ள ஓட்டுநர், அலுவலக உதவியாளர் மற்றும் காவலர் பணியிடத்தை பூர்த்தி செய்ய தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

| வ. எண் | பதவியின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை | கல்வி தகுதி | ஊதிய விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | ஓட்டுநர் | 05 | 8ம் வகுப்பு தேர்ச்சி | PB1 ரூ.5200–20200+2400GP |
| 2 | அலுவலக உதவியாளர் | 02 | 8ம் வகுப்பு தேர்ச்சி | PB1A ரூ.4800–10000+1300 GP |
| 3 | காவலர் | 29 | தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும் | PB1A ரூ.4800–10000+1300 GP |

**1) காலியிட ஒதுக்கீடு**

இனவழிச் சுழற்சி விதிகளின்படி கீழ்க்கண்டவாறு காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

**அ) ஓட்டுநர் பணி காலியிடங்கள் :**

| இனம் | | பொது | பெண் (விதவை) | பெண் (விதவை) (தமிழ் வழி) | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பொதுப் போட்டி (GT) | முன்னுரிமை பெற்றவர் | 1 | | | 1 |
| | முன்னுரிமையற்றவர் | | 1 | | 1 |
| பிற்பட்ட வகுப்பினர் (BC) | முன்னுரிமை பெற்றவர் | 1 | | | 1 |
| மிகவும் பிற்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் (MBC & DNC) | முன்னுரிமை பெற்றவர் | 1 | | | 1 |
| ஆதி திராவிடர் (அருந்ததியர்) (SCA) | முன்னுரிமை பெற்றவர் | | | 1 | 1 |
| **மொத்தம்** | | **3** | **1** | **1** | **5** |

**ஆ) அலுவலக உதவியாளர் பணி காலியிடங்கள் :**

| இனம் | | பொது | பெண் (விதவை) (தமிழ் வழி) | மொத்தம் |
|---|---|---|---|---|
| பொதுப் போட்டி (GT) | முன்னுரிமை பெற்றவர் | 1 | | 1 |
| ஆதி திராவிடர் (அருந்ததியர்) (SCA) | முன்னுரிமை பெற்றவர் | | 1 | 1 |
| **மொத்தம்** | | **1** | **1** | **2** |

## இ) காவலர் பணி காலியிடங்கள் :

| இனம் | | பொது | பெண் | (தமிழ் வழி ) | பெண் (விதவை) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| பொதுப் போட்டி (GT) | முன்னுரிமை பெற்றவர் | 2 | | | | 2 |
| | முன்னுரிமையற்றவர் | 3 | 2 | 1 | 1 | 7 |
| பிற்பட்ட வகுப்பினர் (BC) | முன்னுரிமை பெற்றவர் | 2 | | | | 2 |
| | முன்னுரிமையற்றவர் | 2 | 1 | 1 | 1 | 5 |
| மிகவும் பிற்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் (MBC & DNC) | முன்னுரிமை பெற்றவர் | 2 | | | | 2 |
| | முன்னுரிமையற்றவர் | 1 | 1 | 1 | 1 | 4 |
| ஆதி திராவிடர் (SC) | முன்னுரிமை பெற்றவர் | 1 | | | | 1 |
| | முன்னுரிமையற்றவர் | 1 | 1 | 1 | 1 | 4 |
| ஆதி திராவிடர் (அருந்ததியர்) (SCA) | முன்னுரிமை பெற்றவர் | | | | 1 | 1 |
| பிற்பட்ட வகுப்பினர் முஸ்லீம் (BCM) | முன்னுரிமை பெற்றவர் | 1 | | | | 1 |
| **மொத்தம்** | | **15** | **5** | **4** | **5** | **29** |

## 2) மாவட்ட வாரியாக காலியிட விபரம்

| வ. எண் | மாவட்டம் | அலுவலகத்தின் பெயர் | ஓட்டுநர் | அலுவலக உதவியாளர் | காவலர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | சேலம் | இயக்குநர் அலுவலகம் | | | 5 | 5 |
| | | உதவி இயக்குநர் அலுவலகம் | | | 1 | 1 |
| 2 | காஞ்சிபுரம் | அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம் | | | 2 | 2 |
| 3 | திருவண்ணாமலை | உதவி இயக்குநர் அலுவலகம் | | | 1 | 1 |
| 4 | தருமபுரி | மண்டல இணை இயக்குநர் அலுவலகம் | | | 1 | 1 |
| 5 | திண்டுக்கல் | உதவி இயக்குநர் அலுவலகம் | | | 1 | 1 |
| 6 | கிருஷ்ணகிரி | உதவி இயக்குநர் அலுவலகம், தேன்கனிக்கோட்டை | | | 1 | 1 |
| | | உதவி இயக்குநர் அலுவலகம், ஆவலப்பள்ளி (இ) ஒசூர் | | | 2 | 2 |
| | | உதவி இயக்குநர் அலுவலகம், உத்தனப்பள்ளி | | | 1 | 1 |
| | | உதவி இயக்குநர் அலுவலகம், கல்கொண்டப்பள்ளி | | | 1 | 1 |
| | | உதவி இயக்குநர் அலுவலகம், ஒசூர் | | | 1 | 1 |
| | | உதவி இயக்குநர் அலுவலகம், கிருஷ்ணகிரி | | | 1 | 1 |
| | | தமிழ்நாடு பட்டு பயிற்சி நிலையம், ஒசூர் | 1 | | | 1 |
| 7 | கோயமுத்தூர் | உதவி இயக்குநர் அலுவலகம் | | 1 | 1 | 2 |
| 8 | திருச்சிராப்பள்ளி | உதவி இயக்குநர் அலுவலகம் | 1 | | 1 | 2 |
| | | மண்டல துணை இயக்குநர் | 1 | | | 1 |

| வ. எண் | மாவட்டம் | அலுவலகத்தின் பெயர் | ஓட்டுநர் | அலுவலக உதவியாளர் | காவலர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 9 | ஈரோடு | மண்டல இணை இயக்குநர் அலுவலகம், ஈரோடு | 1 | | | 1 |
| | | உதவி இயக்குநர் அலுவலகம், ஈரோடு | | | 2 | 2 |
| | | உதவி இயக்குநர் அலுவலகம், மாதஹள்ளி | | | 2 | 2 |
| 10 | நாமக்கல் | உதவி இயக்குநர் அலுவலகம் | | | 1 | 1 |
| 11 | திருநெல்வேலி | உதவி இயக்குநர் அலுவலகம், தென்காசி | | | 1 | 1 |
| 12 | மதுரை | மண்டல துணை இயக்குநர் அலுவலகம் | 1 | | 1 | 2 |
| 13 | விழுப்புரம் | உதவி இயக்குநர் அலுவலகம் | | | 1 | 1 |
| 14 | திருப்பூர் | உதவி இயக்குநர் அலுவலகம், உடுமலைப்பேட்டை | | | 1 | 1 |
| 15 | தேனி | உதவி இயக்குநர் அலுவலகம் | | 1 | | 1 |
| | | **மொத்தம்** | **5** | **2** | **29** | **36** |

**3) தகுதிகள்**

**அ) வயது வரம்பு (அனைத்து பதவிகளுக்கும்) (01.07.2017 அன்று)**

| வ. எண் | பிரிவு | குறைந்தபட்ச வயதுவரம்பு | அதிகபட்ச வயதுவரம்பு |
|---|---|---|---|
| 1 | ஆ.தி., ஆ.தி.(அ)., பழங்குடியினர் மற்றும் ஆதரவற்ற விதவைகள் | 18 | 35 |
| 2 | மி.பி.வ / சீ.ம., பி.வ., மற்றும் பி.வ (முஸ்லீம்) | 18 | 32 |
| 3 | ஏனைய வகுப்பினர் (மேற்குறிப்பிட்ட வகுப்பினர் தவிர) | 18 | 30 |

**ஆ) ஓட்டுநருக்கான பிற தகுதிகள் (ஓட்டுநர் பதவிக்கு மட்டும்)**

1) Must possess a valid driving license issued by the competent authority under the Government of Tamil Nadu
2) Must possess elementary knowledge of Auto mechanism as is provided by a Driver
3) Must possess practical experience in driving either in Government Department or in any other private service for a period of not less than one year and
4) The appointing authority should ensure that the person in the panel are capable of driving light Motor vehicle through a driving test conducted in the nearby Institute of Road Transport / Regional Transport Office

**4) முக்கிய தேதிகள் :**

| | | |
|---|---|---|
| அறிவிக்கை நாள் | : | **08.08.2017** |
| பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தில் கிடைக்கபெற வேண்டிய கடைசி நாள் | : | **21.08.2017**<br>( பிற்பகல் 5.45 மணி வரை ) |
| நேர்காணல் நடைபெறும் நாள் மற்றும் இடம் | : | இணையதளத்தில் பின்னர் தெரிவிக்கப்படும். |
| விண்ணப்ப கட்டணம் (அனைத்து பிரிவினருக்கும்) | : | ரூ.100/- |

## 5) நிபந்தனைகள்

1) தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தினை பட்டு வளர்ச்சித்துறை **இணையதளத்திலிருந்து** (www.tnsericulture.gov.in) பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்க வேண்டும்.

2) இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை அலுவலகத்திலிருந்து பரிந்துரை செய்யப்படும் நபர்களும் பட்டு வளர்ச்சித்துறை **இணையதளத்திலிருந்து** (www.tnsericulture.gov.in) விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்க வேண்டும்.

3) விண்ணப்பக்கட்டணமாக ரூ.100/– (ரூபாய் நூறு மட்டும்) செலுத்தப்பட வேண்டும். விண்ணப்பக்கட்டணம் "**இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை" (Director of Sericulture)** என்ற பெயரில் தேசியமயமாக்கப்பட்ட வங்கில் சேலத்தில் மாற்றத்தக்க வகையில் ரூ.100/–க்கான வங்கி வரைவாக (Demand Draft) செலுத்தப்பட வேண்டும். விண்ணப்பதாரர்கள் அனைவரும் விண்ணப்பக்கட்டணம் செலுத்தப்பட வேண்டும். விண்ணப்பக்கட்டணம் செலுத்துவதிலிருந்து எந்த இனத்தை சார்ந்தவர்களுக்கும் விலக்கு அளிக்கப்பட மாட்டாது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

4) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் கல்வி சான்று, சாதிச்சான்று நகல்கள் (சுய சான்றொப்பமிட்டு) மற்றும் விண்ணப்பக் கட்டணத்துடன் விண்ணப்பம் **இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை, அஸ்தம்பட்டி, சேலம் 636 007** என்ற முகவரிக்கு பதிவஞ்சல் ஒப்புதல் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும். அனுப்பப்படும் உறையின் முகப்பில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாக குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும்.

5) 21.08.2017–ந் தேதி பிற்பகல் 5.45 மணிக்கு பிறகு காலதாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் மற்றும் தகுதி பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும் விண்ணப்ப கட்டணம் எக்காரணத்தை கொண்டும் திருப்பி செலுத்தப்படமாட்டாது.

6) நேர்காணல் சம்மந்தமான விபரங்கள் பட்டு வளர்ச்சித்துறையின் இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும். அஞ்சல் மூலம் அனுப்பப்பட மாட்டாது.

## 6) தேர்வு செய்யப்படும் முறை

அ) இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை, சேலம் அலுவலகத்தில் நேர்முகத்தேர்வு மற்றும் சான்று சரிபார்ப்பு மூலம் விண்ணப்பதாரர்கள் தேர்வு செய்யப்படுவர்.

ஆ) நேர்முக தேர்வு நடைபெறும் நாள் மற்றும் நேரம் பட்டு வளர்ச்சிதுறையின் இணையதளத்தில் பின்னர் தெரிவிக்கப்படும்.

## 7) பொதுவான தகவல்கள்

1) பணியிடங்களை நிரப்ப இன சுழற்சி விதிகள் கடைப்பிடிக்கப்படுகிறது. காலிப்பணியிட ஒதுக்கீடு தற்போதுள்ள விதிகளின்படி அமைகிறது.

2) தமிழ்வழிக் கல்வி இட ஒதுக்கீட்டின்கீழ் பயனடைய விரும்பும் விண்ணப்பதாரர்கள் தாங்கள் பயின்ற கல்வி நிலையத்தின் தலைவரிடமிருந்து இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதியைத் தமிழ்வழியில் பயின்று பெற்றார் என்பதற்கான சான்று பெற்றுச் சமர்ப்பித்தல் வேண்டும். தமிழ்வழிக் கல்வியில் பயின்றோர்க்கு அதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள காலிப்பணியிடங்களை நிரப்ப தேர்வு செய்வதற்கான தகுதியான விண்ணப்பதாரர்கள் கிடைக்காத பட்சத்தில் தமிழ்வழியில் பயிலாத தகுதியான சம்மந்தப்பட்ட இனப்பிரிவைச் சார்ந்த விண்ணப்பதாரர்களைக் கொண்டு அக்காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும்.

3) அறிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை தோராயமானதாகும். தெரிவு நடைபெறுவதற்கு முன்புவரை காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை மாறுதலுக்குட்பட்டதாகும்.

4) எவ்வித பரிந்துரை கடிதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தவறும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிப்புமின்றி நிராகரிக்கப்படும்.
5) அடிப்படைத்தகுதிகள், கல்வித்தகுதி, இதரத்தகுதிகள், கட்டணம், வயது, இனம் மற்றும் சாதி குறித்து விண்ணப்பத்தில் தவறான தகவல்கள் அளிக்கப்பட்டிருந்தால் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
6) விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட விவரங்களுக்கான மூலச்சான்றிதழ்கள் நேர்முக தேர்வின்போது சமர்பிக்க வேண்டும். நேர்முக தேர்வின்போது மூலச்சான்றிதழ்களை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர்கள் நேர்முக தேர்விற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.
7) அஞ்சல் உறையின் முகப்பில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.
8) எக்காரணம் கொண்டும் தேர்வுக்கட்டணம் திருப்பி தரப்படமாட்டாது.
9) நேர்காணலில் கலந்துகொள்ளும் விண்ணப்பதாரர்களுக்கு பயணப்படிகள் ஏதும் வழங்கப்படமாட்டாது.
10) ஒரு விண்ணப்பதாரர் ஒரு பதவிக்கு மேல் விண்ணப்பித்தால் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனி விண்ணப்பம் அனுப்ப வேண்டும்.
11) முன்னுரிமை கோரினால் அதற்குரிய சான்றிதழின் நகலை சுயசான்றொப்பமிட்ட விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். தவறினால் உடனடியாக நிராகரிக்கப்படும்.

இயக்குநர்
பட்டு வளர்ச்சித்துறை.